# தமிழ்நாடு எல்லாத் துறைகளிலும் தலைநிமிர்ந்து நிற்கிறது!

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிலுரை!... 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

காவல் துறையை நவீனப்படுத்தும் முயற்சிகள் தொடர்ந்து எப்படியெல்லாம் எடுக்கப்பட்டு வருகிறது என்று நேற்றைய தினம் நான் பல்வேறு நேரங்களில் குறுக்கீட்டு பேசும்போது தெளிவாக எடுத்து சொல்லியிருக்கிறேன். இதைப் பற்றி அதிகம் பேச வேண்டிய அவசியமில்லை. இருந்தாலும் சொல்கிறேன்,

★ குற்றம் மற்றும் குற்றவாளிகளைக் கண்டறியும் நவீன வலைப்பின்னல் அமைப்பு மறுசீரமைக்கப்பட்டு வருகிறது. இதனால் பொதுமக்கள் ஆன்லைனில் புகார்களைப் பதிவு செய்யவும், துறைகளுக்கு இடையே தகவல்களை பகிர்ந்து கொள்ளும் வசதியைப் பெறவும் இயலும்.

சைபர் குற்றங்கள் உள்ளிட்ட அனைத்து வகையான குற்றங்களையும் கட்டுப்படுத்தி வருகிறோம்.

**சட்டம் - ஒழுங்கை பாதுகாக்க வேண்டியது அனைவரின் கூட்டுப் பொறுப்பாகும்!**

காவல் உள்துறை - தீயணைப்பு மற்றும் தடயவியல் துறை சார்பாக கடந்த நான்கு ஆண்டுகளில் செய்யப்பட்ட சாதனைகளை, புத்தங் களாக அச்சிட்டு, இந்த மாமன்றத்தில் இருக்கும் உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கியிருக்கிறோம். ஊடக நண்பர்களும் அந்தப் புத்தகத்தினைப் பெற்று, அதிலுள்ள சாதனைகளையும் தரவுகளையும் - புள்ளிவிவரங்களையும் - உண்மைகளை யும் மக்களிடம் கொண்டுசெல்லவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குற்றங்களை குறைக்கும் துறையாக மட்டும் இல்லாமல், குற்றங் களைத் தடுக்கும் துறையாக காவல்துறை செயல்படவேண்டும் என்று நான் தொடர்ந்து சொல்லிக்கொண்டு வருகிறேன்.

இந்த நிலை உருவாகவேண்டும் என்றால், காவல்துறை சிறப்பாக செயல்பட்டால் மட்டும் போதாது. ஒட்டுமொத்த சமூகமும் சில பொறுப்புகளை உணர்ந்து செயல்படவேண்டும்.

காவல்துறைக்குப் பொறுப்பேற்றிருக்கும் நான், இந்த தருணத்தில், இந்த அவையின் மூலமாக பொதுமக்களுக்கு சொல்லிக் கொள்ள விரும்புவது... சட்டம் - ஒழுங்கை பாதுகாக்க வேண்டியது நம்முடைய அனைவரின் கூட்டுப் பொறுப்பு!

**அந்த அடிப்படையிலே ஒரு அறிவிப்பை வெளியிட விரும்புகிறேன். பல்லாண்டு காலமாக தமிழ்நாட்டில் அரசு பணியாளர் தேர்வு முறையிலே தயாரிக்கப்பட்டு வந்த தரவரிசை பட்டியலானது சமூகநீதி அடிப்படையிலே இருந்து வந்த நிலையிலே கடந்த 2019ஆம் ஆண்டு வரப்பெற்ற உச்சநீதிமன்ற தீர்ப்பின் காரணமாக இந்த முறையில் ஏற்பட்டுள்ள மாற்றம், வருங்காலத்தில் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து ஆய்வு செய்வதற்கும் அதற்கான சட்டரீதியான தீர்வுகள் அளித்திடவும் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்படும். அந்த குழு அளிக்கக்கூடிய பரிந்துரையின் அடிப்படையில் இந்த தீர்ப்பின் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகளிலிருந்து ஒரு நல்ல தீர்வு காணப்படும் என்றும் தங்கள் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.**

**காவல்துறையினரிடம் கனிவாக நடந்து கொள்ளுங்கள்!**

எனவே, நீங்கள் அனைவரும் சட்டத்தை மதித்து நடக்கவேண்டும். சின்ன சின்ன அலட்சியங்கள் கூட தவிர்த்து, சுய ஒழுக்கத்தோடு எல்லோருக்கும் இருக்க வேண்டும். ஒரு குற்றம் நடந்த பிறகு, உடனடியாக காவல்துறைக்குத் தெரிவிக்கும் பலர் இருக்கிறார்கள். அவர்களை பாராட்டும் அதேவேளையில், ஒரு குற்றம் நடப்பதற்கு முன்பே, அதை உணர்ந்து தடுக்கும் முன்னெச்சரிக் கையும் நமக்குத் தேவை!

உங்கள் சுற்றுப்புறங்களில் சந்தேகப்படும்படியான நபர்களின் நடமாட்டம் - செயல்பாடுகள் ஏதாவது தெரிந்தால், உடனடியாக காவல்துறைக்குத் தெரியப்படுத்துங்கள்.

அதுமட்டுமல்ல, ஓய்வில்லாமல், விழிப்புணர்வோடும் - கண்

**"நான் பிடித்த முயலுக்கு மூன்று கால்"என்று பிடிவாதமாக இருப்பவன் இல்லை நான். மக்களாட்சியில் எல்லோருடைய கருத்துகளையும் கவனித்து - ஆராய்ந்து - சரியானவற்றை சரியான நேரத்தில் செய்யவேண்டும் என்று நினைப்பவன் நான்!**

**உள்நோக்கத்தோடு - அரசியல் ஆதாயத்திற்காக தமிழ்நாட்டின் சட்டம் - ஒழுங்கு சரியில்லை என்று பேசுபவர்களுக்கு சொல்லிக்கொள்கிறேன்:**

**இது, மணிப்பூர் அல்ல!**

**இது, காஷ்மீர் அல்ல!**

**உத்தரப் பிரதேச கும்பமேளா மரணங்கள் இங்கு நடக்கவில்லை!**

**இது, தமிழ்நாடு! அதை மறந்துவிடாதீர்கள்.**

காணிப்போடும் களத்தில் இருக்கும் காவல்துறையினரிடம் கனிவாக நடந்துக்கொள்ளுங்கள். அதேபோல் காவல்துறையினரும் பொதுமக்களிடம் கனிவாக நடந்து கொள்ளவேண்டும். காவல்துறையிடம் அதிகாரம் இருக்கிறது சட்டம் - ஒழுங்கை நிலைநாட்டவும் - குற்றங்களைத் தடுக்கவும்தான் என்பதை அத்துமீறும் சில காவலர்கள் உணரவேண்டும். காவல் உயரதிகாரிகள் இதை உறுதிசெய்ய வேண்டும். காவலர்கள் தங்களின் பணிச்சுமையையும் - தனிப்பட்ட வெறுப்புகளையும் பொது மக்களிடம் காட்டக் கூடாது. காவல்துறையும் பொதுமக்களும் நண்பர்கள் என்பதை இருதரப்பும் உணர்ந்து செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். செயல்படுவீர்கள் என்று நம்புகிறேன்.

**காவல்துறை சார்பில் கண்காட்சிகள் நடத்தப்படும்!**

பொதுமக்களுக்கும் காவல்துறைக்கும் இடையே உள்ள இந்த நல்லுறவை மேலும் வலுப்படுத்திட என் நெஞ்சில் நீண்ட காலமாக இருந்து வரும் எண்ணத்தை, உணர்வை செயல் வடிவம் கொடுக்க நான் விரும்புகி றேன். சட்டம் ஒழுங்கை காப்பற்றி இரவு பகலும் கண் துஞ்சாது காவல் பணியில் ஈடுபட்டு, பொது அமைதியை பாதுகாக்கும் காவலர்களுக்கென தனி நாளை கொண்டாடுவதற்காக, காவலர்களின் சேவையை போற்றி பாராட்டிட முதன் முதலாக 1859ல் மெட்ராஸ் மாவட்ட காவல் சட்டத்தை நிறைவேற்றி நவீன மற்றும் அமைப்பு ரீதியான காவல்துறை தோற்றுவிக்கப்பட்ட செப்டம்பர் 6ஆம் நாள் இனி ஆண்டுதோறும் காவலர் நாளாக கொண்டாடப்படும்.

இந்நாளில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றை கடைபிடித்து சிறப்பாக பணியாற்றிய காவலர்களுக்கு பதக்கங்கள் வழங்கப்படும். ஒவ்வொரு மாவட்ட காவல் துறையின் சிறப்புகளை சொல்லக்கூடிய வகையில் அனைத்து மாவட்டங்களிலும் காவல் துறை சார்பில் கண்காட்சிகள் நடத்துதல், குருதிக்கொடை முகாம்கள் நடத்துதல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் அன்று நடைபெறும் என்பதை நாங்கள் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே,

**"தமிழ்நாடு என்பது, குற்றங்கள் நடக்காத மாநிலம்! போதை பொருள் நடமாட்டம் இல்லாத மாநிலம்! பாலியல் குற்றம் இல்லாத மாநிலம்!" என்ற நிலையை நாம் எட்டவேண்டும்.**

**எங்கும் யாராலும் குற்றம் நடக்க கூடாது. மீறி நடந்தால் உடனடியாக குற்றவாளிகள் கைது செய்யப்பட வேண்டும். சட்டத்தின் முன்னால் நிறுத்தப்பட்டு உடனடியாக தண்டனை பெற்றுத் தரப்படவேண்டும்.**

**இந்த உறுதிமொழியை நான் மட்டும் எடுத்தால் போதாது; காவல் துறையின் உயரதிகாரிகள் எடுத்தால் போதாது; ஒவ்வொரு காவலரும் எடுக்கவேண்டும்! என்னுடைய காவல் எல்லைக்கு உட்பட்ட பகுதியில், எந்த வகைப்பட்ட குற்றமும் நடக்கவில்லை நடக்கவும் விடமாட்டேன் என்று ஒவ்வொரு காவலரும் முடிவெடுத்து விட்டால் குற்றங்கள் பூஜ்ஜியத்திற்கு வந்துவிடும்!**

**ஒவ்வொரு காவலரும் 100 விழுக்காடு அர்ப்பணிப்போடு பணியாற்ற வேண்டும்!**

மனித வளர்ச்சியின் எல்லா குறியீடுகளி லும் முன்னணி மாநிலமாக இருக்கும் தமிழ்நாடு குற்றச் சம்பவங்களில் பூஜ்ஜியமாக இருந்தால்தான் நமக்கு பெருமை!

எனவே, இதில் பூஜ்ஜியம் வாங்குவதற்கு, ஒவ்வொரு காவலரும் 100 விழுக்காடு அர்ப்பணிப்போடு பணியாற்றவேண்டும்!

**உறுப்பினர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்!**

பேரவைத் தலைவர் அவர்களே,

நேற்று 11 உறுப்பினர்கள் இந்த அவையிலே 5 மணிநேரம் 25 நிமிடம் மானியத்தை பற்றி விவாதித்தி ருக்கிறார்கள். அவற்றில் பலவற்றிற்கு அவ்வப்போது பதிலளித்து இருக்கிறேன். விடுபட்ட சில பதில்களை சொல்ல வேண்டும் என்றால்,

உறுப்பினர் ஓ.எஸ். மணியன் அவர்கள் திருமருகல் தீயணைப்பு நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கேட்டு இருந்தார். அது நிச்சயம் கட்டித்தரப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல் உறுப்பினர் வேல்முருகன் அவர்கள காவலர்களுக்கு வரு டாந்தர மருத்துவ சோதனைக்கு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் அனுமதி அளிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். அந்த கோரிக்கை நிச்சயம் பரிசீலிக்கப்பட்டு, அனைத்து அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளிலும் காவலர்கள் ஆண்டுதோறும் மருத்துவ பரி சோதனை செய்து கொள்ள உறுதி செய்யப்படும்.

அதேபோல உறுப்பினர் பேராசிரியர் ஜவஹிருல்லா அவர்கள் காவல் நிலையங்களில் சிசிடிவி கேமராக்கள் அவசியம் அமைக்கப்பட வேண்டும் என்றும், உடற்கூறாய்வு சான்றிதழ் உடனடியாக கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். காவல் நிலையங்களை பொறுத்தவரை பெரும்பாலான இடங்களில் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டு வருகிறது. சிசிடிவி கேமராக்கள் அனைத்து காவல் நிலையங்களிலும் இருப்பது நிச்சயமாக உறுதி செய்யப்படும். உடற்கூறாய்வு சான்றிதழை பொறுத்தவரை உடனுக்குடன் வழங்கப்படுகின்றன. அதில் எந்தவித தாமதமும் இல்லாமல் இருக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோல் உறுப்பினர் மாரிமுத்து அவர்கள் கோட்டூர் தீயணைப்பு நிலையத்திற்கு சொந்தக்

**தமிழ்நாடே சமத்துவபுரம் ஆக வேண்டுமென்று திராவிட கொள்கைகளை நெஞ்சில் ஏந்தி, இலக்குகளை நிர்ணயித்து திட்டங்களைத் தீட்டுகிறோம். நம்முடைய தமிழ்ச் சமூகம், சிந்தனையால், பண்பாட்டால், பழக்க வழக்கங்களால் உயர்வடைய வேண்டும். ஏற்றத்தாழ்வற்ற மனித உரிமைச் சமூகமாக வளர வேண்டும்.**

கட்டடம் தேவையென கோரிக்கை விடுத்தார். அவரது கோரிக்கை ஏற்கப்படுகிறது. கோட்டூர் தீயணைப்பு நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

உறுப்பினர் நாகை மாலி அவர்கள், காவல் ஆணையத்தின் பரிந்துரைகளை உடனடியாக செயல்படுத்திட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். ஓய்வு பெற்ற உயர்நீதிமன்றத்தின் நீதியரசர் சி.டி. செல்வம் அவர்கள் தலைமையிலான ஐந்தாவது காவல் ஆணையம் 934 பரிந்துரைகளை வழங்கியிருக்கிறது. அதில் 86 பரிந்துரைகள் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு விட்டன. மேலும் 274 பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதற்கான பல்வேறு கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதோடு, மற்றவை அரசின் பரிசீலனையில் உள்ளன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் அடுத்து உறுப்பினர் சிந்தனைச் செல்வன் அவர்கள், அதேபோல் அவருடைய கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் தொல். திருமாவளவன் அவர்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு பதவி உயர்வில் இடஒதுக்கீடு கோரி என்னிடம் கடிதத்தை அளித்திருக்கிறார்கள். நேரிலும் சொல்லியிருக்கிறார்கள்.

**ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் தலைமையில் குழு!**

அந்த அடிப்படையிலே ஒரு அறிவிப்பை வெளியிட விரும்புகிறேன். பல்லாண்டு காலமாக தமிழ்நாட்டில் அரசு பணியாளர் தேர்வு முறையிலே தயாரிக்கப்பட்டு வந்த தரவரிசை பட்டியலானது சமூகநீதி அடிப்படையிலே இருந்து வந்த நிலையிலே கடந்த 2019ஆம் ஆண்டு வரப்பெற்ற உச்சநீதிமன்ற தீர்ப்பின் காரணமாக இந்த முறையில் ஏற்பட்டுள்ள மாற்றம், வருங்காலத்தில் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து ஆய்வு செய்வதற்கும் அதற்கான சட்டரீதியான தீர்வுகள் அளித்திடவும் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்படும். அந்த குழு அளிக்கக்கூடிய பரிந்துரையின் அடிப்படையில் இந்த தீர்ப்பின் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகளிலிருந்து ஒரு நல்ல தீர்வு காணப்படும் என்றும் தங்கள் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இன்னொரு முக்கிய அறிவிப்பை வெளியிட விரும்புகிறேன். இந்த மண்ணின் ஆதி குடிகளை இழிப்படுத்தும் அடையாளமாக "காலனி" என்ற சொல் பதிவாகியிருக்கிறது. ஆதிக்கத்தின் அடையாளமாகவும், தீண்டாமைக்கான குறியீடாக வும் வசை சொல்லாக மாறியிருப்பதால் இனி இந்த சொல் அரசு ஆவணங்களில் இருந்தும், பொது புழக்கத்திலிருந்தும் நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டார்கள், வெளிநாடு தொழிலாளர்கள் பணிபுரியக்கூடிய இடங்களில் கண்காணிப்பு தேவை என்று பேசியிருக்கிறார்கள். அவருக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் தங்கி பணிபுரியக்கூடிய வெளிநாடு தொழிலாளர்கள் அனைவரும் சட்டவிரோத செயல்களில் ஈடுபடாதவாறு கண்காணிக்கப்படுகிறார்கள்.

அதேபோல் உறுப்பினர் கோ.க. மணி அவர்கள் கேட்டுக்கொண்டபடி, அவருடைய தொகுதியிலே தருமபுரி காவல் உட்கோட்டம், மதிகோன்பாளையம் காவல் வட்டத்தில் அமைந்துள்ள புலி கிராமத்தில் புதிய காவல் நிலையம் 2 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சி தலைவர் பல்வேறு சம்பவங்கள் குறித்து பேசியிருக்கிறார். அவர் பேசிய அத்தனை விவகாரங்களிலும் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. இனியும் நடவடிக்கை எடுக்கப்படும். உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொண்டு, இந்த அரசு பொறுத்தவரைக்கும் எந்தவித அழுத்தங்களுக்கும் உள்ளாகாமல் காவல்துறை சுதந்திரமாக செயல்பட்டு, சட்டம் ஒழுங்கை பராமரிப்பதிலும் நீதியை நிலைநாட்டுவதிலும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது என்பதை நான் அழுத்தம் திருத்தமாக தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



கரூர் மாவட்டம் நெரூரையும் திருச்சி மாவட்டம் உன்னியூரையும் இணைக்கும் வகையில், காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்படும் உயர் மட்டப் பாலம் அமைக்கும் பணியினை கரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி பார்வையிட்டு ஆய்வு செய்தார். மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், மாவட்ட வருவாய் அலுவலர் கண்ணன் உடன் உள்ளனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம் ஜிட்டாண்டஅள்ளி ஊராட்சியில் காரிமங்கலம் மேற்கு ஒன்றியச் செயலாளர் வழக்கறிஞர். எம்.வீ.டி. கோபால் ஏற்பாட்டில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர், தருமபுரி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி சின்னதப்பை கால்வாயின் குறுக்கே ரூ.21.00 இலட்சம் மதிப்பீட்டில் பாலம் அமைக்கும் பணி மற்றும் ஜிட்டாண்ட அள்ளி ஊராட்சி, மதிகேரி கிராமம், போடங்கல் தேனருவி இருளர் இன குடியிருப்புகளுக்கு ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் பைப்லைன் அமைத்து ஒகேனக்கல் குடிநீர் இணைப்பு வழங்கும் விழாவில் கலந்து கொண்டு பணிகளை துவக்கி வைத்தார். உடன் மாநில நிர்வாகி சூடப்பட்டி.சுப்பிரமணி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் எஸ்.முனியப்பன், பி.கே.அன்பழகன், ஏ.எஸ்.சண்முகம், பொதுக்குழு உறுப்பினர் ஏலகிரி.நட்ராஜ், நெசவாளர் அணி மாவட்ட அமைப்பாளர் ராஜபார்ட் ரங்கதுரை மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்.